Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC. No. 104 /2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -5

| Name: | ஜெயராமன் | Calling: | உதவி ஆய்வாளர், ஓய்வு |
|---|---|---|---|
| Father's Name: | முனிசாமி | Religion: | |
| Village: | செங்கம் | Age: | 62 |
| Taluk: | திருவண்ணாமலை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 23.02.2026 நேரம் : 03.25 PM

( எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

அ.சா.5 முதன்மை விசாரணை

நான் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் பணிபுரிந்து 30.06.2024 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 27.09.2022 ம் தேதி 20.30 மணிக்கு வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது அஸ்வாக் அகமது என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப வாணியம்பாடி நகர காவல் நிலைய குற்ற எண். 162/2022 இதச பிரிவுகள் 294(b),352,506(ii) படிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **புகார் மனு அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. புகார் வாக்குமூலத்தின் அசலை முதல் தகவல்அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன்.

வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 30.07.2022 காலை 07.00 மணிக்கு பெரியபேட்டை, கத்திதெரு, வாதி வீட்டிடம் சென்று சாட்சிகள் அபாஸ் பாஷா, முகமது பயாஸ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். **பார்வை மகசர் அ.த.சா.ஆ 4 ஆகவும் மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

சாட்சிகள் அஸ்வக் அகமது, இர்ஷாத் அகமது, இஸ்தியாக் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் எதிரியான பஸ்ருல்லா அபிஸ் என்பவரை அவரது வீட்டிடம் 31.03.2023 பகல் 10.30 மணிக்கு முறைப்படி கைது செய்து நிலையம் சேர்ந்து தக்க இருநபர் பிணையத்தில் அன்றே நிலைய ஜாமினில் விடுவித்தேன். அத்துடன் எனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது குற்றம் உண்மை என தெரியவந்ததால் இதச பிரிவுகள் 294(b),352,506(ii) படிக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச 161(3) உள்ளது போலதான் சொன்னார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

புகார் மனுவை யார் எழுதியது என்றால் புகார்தாரருக்கு தான் தெரியும். அதை யார் எழுதினார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வெள்ளை தாளில் தான் புகார்தாரரிடம் நான் கையொப்பம் வாங்கிதாகவும் அவர் எதுவும் எழுதிக்கொண்டு வரவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சாட்சியின் பெயர், முகவரி யார் என்னிடம் கொடுத்தார்கள் என்றால் சம்பவயிடத்திற்கு சென்று விசாரித்தேன். சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகளிடம் 161(3) குவிமுச வாக்குமூலத்தை யார் பதிவு செய்தது என்றால் கணினிகாவலர். கணினிகாவலர் மூலம் காவல் நிலையத்தில் வைத்துதான் இறுதிஅறிக்கை உடனான அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புலன் விசாரணை எதுவும் மேற்கொள்ளாமல் தவறான இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எந்த ஒரு நபருக்கும் மனஉளைச்சல் ஏற்பட்டதாகவும், அருவெருப்பு ஏற்பட்டதாகவும் எந்த வாக்குமூலத்திலும் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சட்டவிரோதமாக நானே முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்து எந்த வித விசாரணையையும் மேற்கொள்ளாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) ஜெயராமன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.24 14:38:08 +0530